**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் - 2015**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2710- எஸ்ஆர்ஜ (சாதாரண செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஏ ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2711- எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) (விசேட செயற்பாடுகள்) இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஏ ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை மற்றும் வட மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் கீழுள்ள வடக்கு மாகாண சபை ஊடாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது. செயற்திட்டப் பகுதியில் வசிப்பவர்களிற்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவது மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நீர் வளங்களை முகாமை செய்வதும் பாதுகாத்தலும் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டமானது (அ) நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்டகட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல், (ஆ) யாழ்ப்பாணம் நீர் வளங்கள் முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல் மற்றும் (இ) அமுலாக்கல் இயலளவை மேம்படுத்துவதற்காக யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தினை நிர்மாணித்தல் என்பவற்றினை கொண்டுள்ளன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுல்ப்படுத்தப்பட்ட கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,460.07 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.32 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,541.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 76.45 மில்லியன் அல்லது 52 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் அல்லது 33 சதவீதம் பிரான்கைஸ்டி அபிவிருத்தி முகவர் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 2,555.27 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 22.87 மில்லியன் அல்லது 15 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 பெப்ரவரி 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப்

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தினதும் கடன்வழங்கும் முகவர்களிதும் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்பிற்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமா என்பதும்,

(உ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதிக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்பிற்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 திசெம்பர் 31 வரை பிரான்செய்சிடி அபிவிருத்தி முகவரால் (ஏஎவ்டி) அறவிடப்பட்ட ரூபா 57.8 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும் கடன் இல. 2710 எஸ்ஆர்ஜ மற்றும் 2711 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) இன் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் அறவிடப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 116,938.65 ஆன வட்டியும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைபெறும் வேலை ரூபா 1,084.1 மில்லியனாகும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 1,347.8 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. வித்தியாசம் ரூபா 263.7 மில்லியன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இந்த செயற்திட்டத்தின் கீழான செயற்திட்டத்தின் மொத்தச் செலவினம் ரூபா 491 மில்லியனாகும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செயற்திட்டக் கிரயம் ரூபா 424 மில்லியனாகும். வித்தியாசம் ரூபா 67 மில்லியன் இணக்கம் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறப்பட்ட தகவலின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் விடுவிக்கப்பட்ட ரூபா 136.3 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 88.9 மில்லியன் நேரொத்த தொகையுடன் உடன்பட்டிருக்கவில்லை. இது செயற்திட்டத்தின் ஊழியர்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 48.6 மில்லியன் தொகையான வேதனம் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பை போல கடனளிக்கும் முகவர் மூலம் பெறப்பட்ட அனுப்புதல்கள் அதே போல் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புக்கள் போன்றவற்றிலிருந்து சபையால் கழிக்கப்பட்டிருந்ததுடன் அது மேற்குறிப்பிட்ட வித்தியாசத்திற்கு பிரதான காரணமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியங்களிற்கான நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 76.45 | 8,541.76 | 1,437.00 | 2.96 | 402.70 | 9.25 | 1,172.60 |
| ஏஎவ்டி | 48.00 | 5,363.04 | 30.00 | 0.16 | 21.30 | 0.98 | 124.64 |
| இலங்கை அரசாங்கம் | 22.87 | 2,555.27 | 500.00 | 0.59 | 80.84 | 2.36 | 299.38 |
| மொத்தம் | 147.32 | 16,460.07 | 1,967.00 | 3.71 | 504.84 | 12.59 | 1,596.62 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தண்ணீர் வள பங்கீடுகள் மீதான இரணைமடுப் பகுதியில் விவசாயிகளிடமிருந்து வலுவான எதிர்ப்புக் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், ரூபா 16,460.07 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.32 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 1,596.62 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 12.59 மில்லியன் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 4 ஆண்டுகள் மற்றும் 10 மாதங்கள் கடந்த பின்னர் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்நதது.

(ஆ) யாழ்ப்பாண மாநகர பகுதியில் புதிய நீர்த்தேக்க ஏற்ற நிலையம், சுத்திகரிப்பு பொறிகள், இரணைமடு குளத்தில் நீரிறைத்தல் நிலையம் மற்றும் நிலத்து நீர் வழங்கலும் குழாயிடலும் மற்றும் பிரதான சுத்திகரித்த தண்ணீர் பரிமாற்றம் என்பவற்றின் நிர்மாணத்திற்காக ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் வழங்குவதற்கு பிரான்கைஸ்டி அபிவிருத்தி முகவருடன் இலங்கை அரசாங்கத்தால் புறம்பான கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. அவற்றில் செயற்திட்டமானது ஆண்டின் இறுதியில் ரூபா 124.64 மில்லியன் தொகை அல்லது 2.3 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணி செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை கைவிடப்பட்டமை காரணமாக 2015 ஒக்தோபர் 06 இல் இரத்துசெய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், 2012 முதல் 2015 வரையான நிதிகளின் குறைபயன்பாடுகளில் செலுத்தப்பட்ட ரூபா 57.80 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணங்களிற்கு மேலதிகமாக ரூபா 11.90 மில்லியன் இழப்பீடு மற்றும் ரூபா 15.2 மில்லியன் விவரணக் கட்டணம் செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக செயலாற்றல்**

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிடப்பட்ட 3.1 (அ) ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் யாழ்ப்பாண தீவுப்பகுதிக்கான பிரதான நீர் வளங்களாக இரணைமடு குளத்தினை பயன்படுத்துவதால் இரணைமடு குளப் பகுதியில் வசிக்கின்ற சமூதாயத்தின் வலுவான எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சரவை யாழ்ப்பாண தீவுப்பகுதியின் தண்ணீர் தேவைகளை நிரப்புவதற்கு கடல் தண்ணீரை பாவிப்பதற்காக செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மாற்றுவதற்கு 2015 யூலை 15 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், வேலைகளின் நோக்கெல்லைகளின் மாற்றங்களிற்கான திட்டங்கள் மற்றும் அவற்றின் கிரய மதிப்பீடு 2015 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறப்பட்ட தகவலின் பிரகாரம், யாழ்ப்பாண தீவகற்பத்திலுள்ள நிலத்தடி நீர் வளங்களானது முறையற்ற கழிவகற்றல் மற்றும் மண் அகழ்ல் மற்றும் இலகுவாக மாசடைவதற்கு வழிவகுத்திருந்த சுண்ணாம்புக் கல்லிடல் என்பவற்றினால் பெருமளவை கட்டிருந்தது. தண்ணீர் பாதுகாப்பிற்கு அவசியமான பாதுகாப்பான சாக்கடை சேகரிப்பு மற்றும் கழிவகற்றல் முறைமை எதுவும் இருக்கவில்லை புரிந்துகொள்ளப்பட்டிருந்ததுடன் கழிவு சேகரித்தல் முறைமை, சாக்கடை சுத்திகரித்தல் பொறி மற்றும் கடலிற்குள் வழிந்தோடும் பொருட்கள் பராமரிப்பு உபகரணங்கள் வழங்கல் என்பவற்றின் கட்டிட நிர்மாணம் உள்ளடங்கலாக யாழ்ப்பாண தீவகற்பத்தில் சாக்கடை மற்றும் சுகாதார முறைமைகளை முன்னேற்றும் நோக்கத்திற்காக செயற்திட்டத்தால் ரூபா 3,982 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 35.64 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சாக்கடை சுத்திகரிப்பு பொறி மற்றும் சாக்கடை வலையமைப்பின் பங்களிப்பிற்காக வடிவமைப்பு வேலைகள் மற்றும் கேள்வி நடைமுறை என்பன பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய நிர்மாண வேலைகள் பின்னர் 2016 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆகவே, ரூபா 24.30 மில்லியன் கிரயத்தில் 2015 இல் இது தொடர்பில் நடாத்தப்பட்ட வீட்டுடமையாளர்கள் மற்றும் மேற்பரப்பு அளவைகள் ஊடாக சேகரிக்கப்பட்ட தகவல்கள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்த முடியாதிருந்தது.

(ii) பிரதான வீதிகளிற்கு குறுக்கே குழாய் பொருத்துதல் தொடர்புபட்ட வேலைகள் மற்றும் அலுவலக கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் செயற்திட்டத்தின் கொள்வனவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மற்றும் மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட ஏனைய 30 வேலைகளில் ரூபா 266.6 மில்லியன் கிரயத்திலான வேலைகள் மாத்திரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.